**ஹோமியோபதி வைத்திய சபையின் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கை - 2023 சனவரி 01 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி**

---

ஹோமியோபதி வைத்திய சபையின் 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு அலுவல்கள் மீது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினாலும் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் அறிவிப்புச் செய்யப்படுமாறான கால எல்லைகளினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்தினுள் தயாரிக்க நேரிடுவதாக உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதியிட்ட 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுகள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2023 மற்றும் 2024 நிதியாண்டுகளுக்குரிய, கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட | ஹோமியோபதி வைத்திய சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் ஒரு கணக்காளர் மற்றும் கணக்கீட்டுப் பிரிவிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று இல்லாமையினாலும், அனைத்து கணக்கீட்டுப் பணிகளும் உள்நாட்டு மருத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதனாலும், இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் பணிகள் அப்பிரிவினால் முன்னெடுக்கப்படாமையினால் வெளித்தரப்பினூடாக இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டமை காரணமாக அவர்கள் அதிக | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் உரிய தினத்தில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிதிக்கூற்றுகள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலத்தை எடுத்துக் கொண்டமையால் கணக்குகள் தயாரிப்பது தாமதமடைந்திருந்தது. மேலும், 2023 செப்டம்பர் 08 ஆம் திகதியுடன் மருத்துவ சபையின் பதவிக்காலம் முடிவடைந்தமையினால், கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு மீண்டும் ஒரு மருத்துவ சபை நிறுவப்படும் வரை தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**2.2 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் நிலை**

சபையினால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| நிதிக்கூற்று உருப்படி | பெறுமதி ரூபா |
|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 11,265,459 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 3,835,065 |
| **மொத்த சொத்துக்கள்** | **15,100,524** |
| **பொறுப்புகள்** | **11,400,430** |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | - |
| நடைமுறைப் பொறுப்புகள் | 3,700,094 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்** | **15,100,524** |
| மொத்த வருமானம் | 38,130,740 |
| மொத்த செலவினம் | 37,229,961 |
| **மிகை** | **900,779** |

### 2.3 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஹோமியோபதி வைத்திய சபையின் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையிலான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதமையினால், அதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் வகைப்படுத்தல், துல்லியத்தன்மை, முழுமைத்தன்மை மற்றும் அங்கீகாரம் குறித்த உறுதிப்பாட்டைக் கணக்காய்வின் போது பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. | ஹோமியோபதி வைத்திய சபையில் ஒரு கணக்காளர் இல்லாத காரணத்தினால், சபையின் அனைத்து கணக்கீட்டுப் பணிகளும் உள்நாட்டு மருத்துவப் பிரிவின் கணக்கீட்டுப் பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படுவதாகவும், அனைத்து உறுதிச்சீட்டுகளும் உள்நாட்டு மருத்துவப் பிரிவிடமே இருந்தன என்றும், சபை இந்த உறுதிச்சீட்டுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு கோரிய போதிலும், உள்நாட்டு மருத்துவப் பிரிவின் கணக்கீட்டுப் பிரிவினால் அவை சமர்ப்பிக்கப்படாமையே இதற்குக் காரணமாகும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க, அந்தந்தக் காலப்பகுதிக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு | 2023 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புகளை உரிய திகதியில் செலுத்தத் தவறியமை காரணமாக, 2024 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூபா 13,565 மேலதிக கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அக்காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலை மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட சிரமங்கள் காரணமாக இது நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புகளை உரிய திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டம் | | | |
| | (i) 9 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவு | சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னரேனும் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் நியமித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், 2023 | ஹோமியோபதி வைத்திய சபைக்கு சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கான தேர்தலை நடத்துதல், உறுப்பினர்களை நியமித்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் சுகாதார அமைச்சு, | சட்டத்தின் பிரகாரம் சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் நியமித்தலும் |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் 08 ஆம் திகதியுடன் பதவிக்காலம் முடிவடைந்த முந்தைய சபைக்காக புதிய உறுப்பினர்கள், சபையின் பதவிக்காலம் முடிவடைந்து 10 மாதங்களுக்குப் பின்னரே 2024 ஜூலை 05 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டிருந்தனர். | விடயப்பொறுப்பு அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரினால் மேற்கொள்ளப்படுவதுடன், அந்தத் தாமதத்திற்கு மருத்துவ சபையின் தீர்மானங்களோ அல்லது தலையீடுகளோ காரணமாக இருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 15 ஆம் பிரிவின் (உ) உப பிரிவு | ஹோமியோபதி வைத்திய முறையில் சிகிச்சையளிக்கும் ஹோமியோபதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான குறைந்தபட்சத் தரங்களைத் தீர்மானித்து, அதற்கமைய அந்நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹோமியோபதி நிறுவனங்களை நிறுவுவதற்கு அக்காலத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை மற்றும் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை காரணமாக இது இவ்வாறு அமைந்திருந்த போதிலும், குறைந்தபட்ச வசதிகளின் கீழ் ஹோமியோபதி சிகிச்சை அளிக்கும் இலவச மருத்துவ நிறுவனங்கள் நிறுவப்பட்டதுடன், தனியார் ஹோமியோபதி வைத்திய நிலையங்களைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவை ஒழுங்குபடுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | சபையினால் ஹோமியோபதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான குறைந்தபட்சத் தரங்களைத் தீர்மானித்து, அதற்கமைய அந்நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) 16(அ) ஆம் பிரிவு | ஹோமியோபதி மருந்தாளர்கள் மற்றும் தாதிகளை ஹோமியோபதி வைத்திய சபையில் பதிவு செய்ய வேண்டும் என்ற போதிலும், இதுவரை அந்த மருந்தாளர்கள் மற்றும் தாதிகளைப் பதிவு செய்வதற்கான முறையான நடைமுறை ஒன்றினைச் செயற்படுத்தி அவர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹோமியோபதி மருந்தாளர்கள் மற்றும் தாதிகளைப் பதிவு செய்வதற்காகப் பதிவுப் பேரேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை தகுதியுள்ள ஹோமியோபதி மருந்தாளர்கள் மற்றும் ஹோமியோபதி தாதிகள் எவரும் பதிவுக்காக விண்ணப்பிக்காத காரணத்தினால் பதிவுகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. | ஹோமியோபதி மருந்தாளர்கள் மற்றும் தாதிகளைச் சபையில் பதிவு செய்வதற்கான முறையான நடைமுறை ஒன்றினைச் செயற்படுத்தி, அவர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) 16(க) பிரிவு | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கு இணங்க, ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை | ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்கு ஹோமியோபதி வைத்திய சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமையினால், | சட்டத்தின் பிரகாரம் ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றினை நிறுவுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி ஒன்றினை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (v) 30(4) ஆம் பிரிவு | குறித்த திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் 03 தடவைகள் மாத்திரம் ஹோமியோபதி தொழிலில் ஈடுபடுபவராக பதிவு செய்வதற்கான தகைமைப் பரீட்சிப்பதற்காக எழுத்துப் பரீட்சை நடத்தியிருக்க வேண்டும் என்ற போதிலும், 08 வருட காலப்பகுதிக்குள் 02 தடவைகள் மாத்திரம் அப்பரீட்சை நடத்தப்பட்டிருந்தது. | முன்னைய மருத்துவ சபையினால் இரண்டு தடவைகள் பரீட்சை நடத்தப்பட்ட போதிலும், மூன்றாவது பரீட்சையை நடத்துவதற்கு முன்னர் சபையின் பதவிக்காலம் முடிவடைந்திருந்தது எனவும், புதிய மருத்துவ சபையின் கீழ் அப்பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதிக்குள் ஹோமியோபதி தொழிலில் ஈடுபடுபவராக பதிவு செய்வதற்குத் தேவையான பரீட்சைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) 31(1) உப பிரிவு | ஹோமியோபதி மருந்தாளர்களைப் பதிவு செய்வதற்காக ஹோமியோபதி மருந்தாளர் பேரேடு ஒன்றினைப் பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும், இந்த ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படாமையினால் 2025 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையிலும் அத்தகைய பேரேடு ஒன்றினைப் பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ள போதிலும், பதிவு செய்வதற்குத் தகுதியுள்ள மருந்தாளர்கள் எவரும் முன்வராத காரணத்தினால் இப்பேரேடு செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒழுங்குவிதிகளைத் தயாரித்து மருந்தாளர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 10.1 ஆம் பிரிவு | அரச சேவையின் பதவியொன்றுக்கு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கும் போது, 169 ஆம் இலக்கப் படிவத்தைப் பூர்த்தி செய்து உரிய மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக மருத்துவப் பரிசோதனைக்குத் தோன்றுமாறு நிறுவனத் தலைவர் பணிப்புரை விடுக்க வேண்டும் என்ற போதிலும், நிரந்தர நியமனம் பெற்றுள்ள 05 வைத்திய உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ உதவியாளர், ஒரு மருந்தாளர் மற்றும் 04 அலுவலகப் பணி உதவியாளர்கள் ஆகியோரின் மருத்துவ அறிக்கைகள் உரிய தனிப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பதவியணியின் பதவிகளை நிரந்தரமாக்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை எனவும், அந்தப் பரிசோதனைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 10.6 ஆம் பிரிவு | அரச சேவையின் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர், அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டிய அரசியலமைப்பின் 7 ஆவது அட்டவணை நியதிகளின் பிரகாரமான உறுதிமொழி அல்லது சத்தியப்பிரமாணம், நிரந்தர நியமனம் பெற்ற 04 வைத்திய உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஒரு மருந்தாளர் ஆகியோரின் தனிப்பட்ட கோப்புகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 05 வைத்திய உத்தியோகத்தர்கள், 04 மருந்தாளர்கள் மற்றும் 03 அலுவலகப் பணி உதவியாளர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட | அந்த பதிவேடுகள் உடனடியாகத் தனிப்பட்ட கோப்புகளில் சேர்ப்பதற்குப் பதிவாளர் அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சத்தியப்பிரமாணங்களில், சத்தியப்பிரமாணம் பெற்றுக்கொண்டவரினால் அவை பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்படாத காரணத்தினால் அவை செல்லுபடியற்றதாகக் காணப்பட்டன. | | |
| | (iii) 16.1 ஆம் பிரிவு | சேவையில் நிரந்தரமாக்கல், பதவியுயர்வு மற்றும் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளை உரிய தினங்களில் நடத்துவதற்கு நிறுவனத் தலைவர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 02 பதவிகளுக்குரிய 11 உத்தியோகத்தர்களுக்காக, கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையிலும் வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால், அவ்வுத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்க முடியாமல் போயிருந்தது. | வினைத்திறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையை ஆயுர்வேதத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவின் மூலம் நடத்துவதற்கு மருத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அதற்குரிய அனைத்துப் பணிகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், பரீட்சை விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவடைந்துள்ள போதிலும், மருத்துவச் சபையின் கொடுப்பனவுப் பணிகள் உள்நாட்டு மருத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், அப்பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான கொடுப்பனவுகள் இதுவரையில் அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் பரீட்சை தாமதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயல்வழிக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உள்ளிட்ட வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் அறிக்கையிடக்கட வேண்டும் என்ற போதிலும், 2022 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை 2025 செப்டம்பர் 26 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஹோமியோபதி வைத்தியச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கணக்காளர் ஒருவர் இல்லாததினால், இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் பணி வெளித் தரப்பினூடாக மேற்கொள்ளப்பட்டமையால் அவர்கள் அதிக காலத்தை எடுத்துக்கொண்டுள்ளனர். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் ஹோமியோபதி மருந்துக் கலவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான NVQ பாடநெறிகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இப்பாடநெறிகளுக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய தொழில் தகைமை நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், பாடநெறிகளை நடத்துவதற்காக 3 வெளி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது அது தொடர்பான கலந்துரையாடல்கள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. | தீர்மானிக்கப்படும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் ஹோமியோபதி வைத்தியராகப் பதிவு செய்வதற்கு அறவிடப்படும் பதிவுக் கட்டணம் ரூபா 150 ஆகவும், அதற்காக வருடாந்தம் அறவிடப்படும் கட்டணம் (Annual Fee) ரூபா 50 ஆகவும் காணப்பட்டதுடன், அதனைத் தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அத்திருத்தங்களுக்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கும் பணிகளுக்காக சுதேச மருத்துவப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | அறவிடப்படும் கட்டணங்கள் காலோசிதமாகத் திருத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் சிகிச்சையகங்களைக் கண்காணிப்பதற்காக CCTV கட்டமைப்பு ஒன்றினை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அது நிறுவப்பட்டிருக்கவில்லை. | போதுமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாமையினால் இத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போன போதிலும், போதுமான நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும். | தீர்மானிக்கப்படும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைத்திய சபையினால் வழிநடத்தப்படும் 14 அரச ஹோமியோபதி சிகிச்சையகங்கள் இலங்கையினுள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இங்கிரிய, மட்டக்களப்பு மற்றும் ரத்கம ஆகிய மூன்று | சிகிச்சையகங்களின் வெற்றிடமாகவுள்ள மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்காக மீண்டும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குத் தீர்மானிக்கும் காரணியாக | வெற்றிடமாகவுள்ள அருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்காகத் தாமதமின்றி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சிகிச்சையகங்களுக்கு அத்தியாவசியமான வைத்திய அதிகாரிகள் இல்லாமையினால் ஏனைய சிகிச்சையகங்களின் வைத்திய அதிகாரிகள் அந்தச் சிகிச்சையகங்களின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியதாக காணப்பட்டது. | அமைந்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 48 ஆக இருந்தபோதிலும், உள்ளபடியான பதவியணி 31 ஆகக் காணப்பட்டது. பதிவாளர் பதவி 2021 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுவதுடன், 03 மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளும் 09 மருந்துக் கலவையாளர் பதவிகளும் 2022 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டன. | இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், அந்த அங்கீகாரங்கள் வழங்கப்படாமையினால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | அத்தியாவசிய பதவிகளுக்காகத் தாமதமின்றி ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்து நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |